DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 10 / 2014
Deposition of PW 7 / LW11

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.வனிதா |
| Father's / Husband Name | : | மாமுண்டி |
| Village | : | மறவப்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.03.2026.
1,2 எதிரிகள் ஆஜர்.

**<u>அரசுத் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :</u>**

1.) நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் முதல் விசாரணை பதிவு செய்த அதிகாரி இராதாகிருஷ்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் , புலன் விசாரணை அதிகாரியான குமார் சார்பு ஆய்வாளர் ஆகியோர் பணி மாறுதலாகி சென்றுள்ளபடியால் அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 29.11.2013 ம் தேதி 14.15 மணியளவில் 1,2 எதிரிகளை பாலூத்து விலக்கு அருகே வைத்து கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளை கனம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கடந்த 13.01.2014 ம் தேதி குமார் சார்பு ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று

சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் இராதாகிருஷ்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களிடம் கூறியது போல் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3.) பின்பு அன்றைய தினமே வழக்கில் காயம் பட்ட சுப்பிரமணி என்பவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர் பாலகணேஷ் அவரிடம் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.6.** பின்பு அன்றைய தினமே அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே குற்ற பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் குறித்த சாட்சிகளின் முன்னிலையில் கைது செய்யாமல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல.அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் , எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 17:18:52 +0530

Judicial Magistrate,
Andipatti.